உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 23.08.2026 • மலர் 04 • இதழ்: 235 • ஞாயிறு • Edition : Nagercoil • 23.08.2026 • Vol : 04 • Issue : 235 • Page : 4 • Rs. 5/-

# தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வாகியுள்ள தமிழக ஆசிரியர்கள்

## முதல்வர் விஜய் வாழ்த்து




சென்னை: தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள தமிழகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப்படும் தேசிய நல்லாசிரியர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டின் புளியம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆசிரியர் தங்கராஜ் மற்றும் மதுரை, பிஎம் ஸ்ரீ கேந்திரிய வித்யாலயா பள்ளி ஆசிரியை அமுதா ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைக்கும் உன்னதப் பணியை மேற்கொண்டு வரும் தங்களின் அர்ப்பணிப்பு, புதுமையான கற்பித்தல் முறைகள் மற்றும் மாணவர் நலனில் கொண்ட அக்கறைக்கு கிடைத்துள்ள இந்த உயரிய அங்கீகாரம், தமிழ்நாட்டின் கல்விச் சிறப்புக்கும், ஒட்டுமொத்த ஆசிரிய சமூகத்திற்கும் மேலும் பெருமை சேர்க்கிறது.

இந்த தேசிய விருது தங்களின் பணிக்கு மேலும் ஊக்கமளித்து, எண்ணற்ற மாணவர்களின்

வாழ்க்கையில் ஒளியேற்றட்டும்! நல்வாழ்த்துகள்!" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுக்கடை அருகே அனுமதியின்றி பாறை உடைப்பு; 3 பேர் மீது வழக்கு

புதுக்கடை, ஆக. 23

புதுக்கடை அருகே முஞ்சிறை பகுதியில் சித்தா மருத்துவக் கல்லூரி அமைந்துள்ளது. அந்தப் பகுதியில் இருந்து அரசு உரிமமோ உரிய அனுமதிகளோ இன்றி பாறைகளை உடைத்து கடத்துவதாக புதுக்கடை போலீசருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் தலைமையிலான போலீசார் அந்தப் பகுதியில் நேற்று திடீர் சோதனை நடத்தினர்.

அப்போது அந்த பகுதியில் கம்பிரசர் இயந்திர வாகனம் மூலம் பாறை உடைப்பது கண்டுபிடிக்கப்பட்டது. போலீசாரை கண்டவுடன் வாகன டிரைவர் வாகனத்தை அங்கேயே நிறுத்திவிட்டு தப்பி ஓடிவிட்டார்.

இதை அடுத்து போலீசார் வாகனத்தை கைப்பற்றி போலீஸ் நிலையம் கொண்டு வந்தனர். இதை தொடர்ந்து வாகன டிரைவர், உரிமையாளர் மற்றும் நிலத்தின் உரிமையாளர் என மூன்று பேர் மீது புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

## கூடலூர் அருகே ஓவேலியில் புலி தாக்கி மேலும் ஒருவர் உயிரிழப்பு

கூடலூர்: கூடலூர் அருகே மேலும் ஒருவரை புலி அடித்துக் கொன்றதால் ஆவேசமடைந்த கிராம மக்கள், வனத்துறையை கண்டித்து நேற்று சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் யானை, புலி உள்ளிட்ட வன விலங்குகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. கடந்த 9ம் தேதி ஓவேலி பகுதிக்கு உட்பட்ட லாரெஸ்டன் நம்பர் 4 என்ற இடத்தில் பாலகிருஷ்ணன் என்பவரை புலி அடித்துக் கொன்றது.

வனத்துறையினர் 16 இடங்களில் கேமராக்களை வைத்து தினந்தோறும் கண்காணித்து வந்தனர். நேற்று காலை கூடலூர் வன அலுவலர் தேவராஜ் சம்பவ இடத்துக்கு சென்று கேமராக்களை ஆய்வு செய்தபோது புலியின் நடமாட்டம் எந்த கேமராவிலும் பதிவாகவில்லை.

இந்நிலையில், நேற்று மதியம் ஓவேலியை சேர்ந்த ரவிச்சந்திரன் (51) என்பவர் தனது தோட்டத்தில் விவசாய பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது அந்தப் பகுதிக்கு வந்த புலி அவரை தாக்கி புதருக்குள் இழுத்துச் சென்று கொன்றுள்ளது.

புலியின் உறுமல் மற்றும் ரவியின் அலறல் சத்தம் கேட்ட ஓவேலி ஊராட்சி ஊழியர்கள் உடனடியாக வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர். வனத்துறையினர் வந்து ரவிச்சந்திரனின் சிதைந்த உடலை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது, அங்கு திரண்ட பொதுமக்கள், புலியை கூண்டு வைத்து பிடிக்க நடவடிக்கை எடுக்காத வனத்துறையை கண்டித்து சாலை மறியலில் ஈடுபட்டனர். பொதுமக்கள் கூறும்போது, ''அடுத்து இந்த புலி யாரை வேண்டுமானாலும் கொல்லலாம் என வனத்துறையிடம் தெரிவித்து வந்தோம். புலியை ட்ரோன் கேமராக்கள் மூலம் வேடிக்கை மட்டுமே பார்த்து வருகிறார்கள். குழந்தைகளை வைத்துக் கொண்டு இங்கு எப்படி நாங்கள் வாழ முடியும்'' என்றனர். கூடலூர் வன அலுவலர் தேவராஜ், டிஎஸ்பி கோபால கிருஷ்ணன், ஓவேலி வனச்சரகர் கருப்பு மற்றும் அதிகாரிகள் அங்கு சென்று பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## கன்னியாகுமரி சின்ன முட்டம் மீன்பிடி துறைமுகத்தில் குத்துக் காயங்களுடன் வாலிபர் பிணம்!

### போலீசார் அடையாளம் காணும் பணி தீவிரம்!!

கன்னியாகுமரி, ஆக. 23

கன்னியாகுமரி சின்னமட்டம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து தினமும் 350 க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலில் மீன் பிடிக்க சென்றுவிட்டு இரவில் திரும்புவது வழக்கம். இங்கு நூற்றுக்கணக்கான வெளி மாநில தொழிலாளர்கள் உள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் துறைமுகத்தின் கேண்டீன் அருகே மீன்வலைகள் பின்னும் பகுதியில் கழுத்தில் கத்தி குத்து காயத்துடன் சுமார் 35 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் இறந்து கிடந்தார். அருகில் மது பாட்டில்கள் மற்றும் செருப்பு சிடந்தது. இது குறித்த தகவல் பேரில் கன்னியாகுமரி டிஎஸ்பி பிரகாஷ் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரித்தனர். மேலும் இறந்து கிடந்தவர் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இறந்தவர் யார்? என தெரியவில்லை. இது தொடர்பாக கன்னியாகு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இதற்குறையில் இறந்து கிடந்தவர் வட மாநிலத்தை சேர்ந்தவராக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. நேற்று முன்தினம் இரவு வேளையில் கொலை நடந்துள்ளது. இறந்தவர் யார் என தெரியவில்லை. இறந்தவர் யார் என்று தெரிந்தால் தான் கொலையாளிகள் தொடர்பான விசாரணை நடத்த முடியும் என போலீசார் கூறியுள்ளனர். சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில வெளிமாநிலங்களில் இருந்து பணியாளர்களை அமர்த்தினால் விசைப்படகு உரிமையாளர்கள் பணியாளர்களின் அடையாள அட்டையாக ஆதார் கார்டு, டிரைவிங் லைசென்ஸ் ஆகியவற்றை முகவரி சான்றாக கண்டிப்பாக வாங்கி வைக்க வேண்டும் என்று மாவட்ட எஸ்பி ஸ்டாலின் ஏற்கவே உத்தரவிட்டிருந்தார். ஆனால் ஒரு சிலர் மட்டுமே எஸ் பி உத்தரவை பின்பற்றுவதாகவும் ஏராளமானோர் பின்பற்றுவதில் எனவும் புகார் எழுந்துள்ளது. இறந்த வாலிபரின் அடையாள அட்டை இல்லாததால் அவர் குறித்து தகவல் தெரியவில்லை எனவும், உடனடியாக கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் போலீசார் கூறினர்.

## பேச்சிப்பாறை அணையில் ரூ.13 கோடியில் சுற்றுலா மேம்பாட்டு பணிகள்;கலெக்டர் ஆய்வு





நாகர்கோவில், ஆக.23

குமரி மாவட்டம் பேச்சிப்பாறை அணையை சுற்றியுள்ள பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று 22. ம் தேதி ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:

இயற்கை எழில் கொஞ்சும் கன்னியாகுமரி மாவட்டத்தின் மிக முக்கியமான நீர் ஆதாரமாகவும், சிறந்த சுற்றுலாத் தலமாகவும் பேச்சிப்பாறை அணை திகழ்கிறது. மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில், அடர்ந்த வனப்பகுதிகளுக்கு மத்தியில் அமைந்துள்ள இந்த அணை, மாவட்டத்தின் மிகப்பெரிய பாசன திட்டமாகும். நாகர்கோவிலில் இருந்து சுமார் 43 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பேச்சிப்பாறை அணைக்கு தினமும் ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். அணையை சுற்றியுள்ள அடர்ந்த மரங்கள், நீல நிறத்தில் காட்சியளிக்கும் பரந்த நீர் பரப்பு மற்றும் மலையிலிருந்து வீசும் குளிர்ந்த காற்று ஆகியவை இங்கு வரும் பயணிகளின் கவர்கின்றன. குறிப்பாக வார இறுதி நாட்களிலும், அரசு விடுமுறை நாட்களிலும் குடும்பத்துடனும் நேரத்தைக் கழிக்கப் பலர் அணைக்கு வருகை தருகின்றர். அதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சரின் 20262027ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற பேச்சிப்பாறை அணைப் பகுதியில் ரூ.13.00 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிப்பு வெளியானது. இதற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயாரிப்பது தொடர்பாக, பேச்சிப்பாறை அணைப் பகுதிக்கு சென்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பேச்சிப்பாறை அணைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தப்படும். குறிப்பாக நவீன உணவுக் கூடம், சுகாதாரமான கழிப்பறை வசதிகள் மற்றும் அழகிய நுழைவுவாயில், குழந்தைகள் விளையாடும் பூங்கா, அழகிய தொங்கு பாலம், பார்வையாளர் மாடம், காட்சி முனை மற்றும் பாதுகாப்பான நடைபாதைகள் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட சுற்றுலா அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்குத் தனித்தனி வாகன நிறுத்தங்கள் மற்றும் பேருந்து நிறுத்தத்தை மேம்படுத்துதல் வேண்டும். பணிகளை விரைவில் துவக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கூறினார். நடைபெற்ற ஆய்வில் மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், திருவட்டார் வட்டாட்சியர் மரகதவல்லி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அஜிதா, சுரேஷ்குமார், இளநிலை சுற்றுலா அலுவலர் வெள்ளசாமி, நீர்வளத்துறை பொறியாளர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## மனைவியை தாக்கிய புகாரில் பரமக்குடி டிஎஸ்பி சஸ்பெண்ட்

பரமக்குடி: தன்னை அடித்து துன்புறுத்துவதாக மனைவி அளித்த புகாரின்பேரில், பரமக்குடி டிஎஸ்பி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி டிஎஸ்பியாக இருப்பவர் ஜாபர் சித்திக். இவர் வேறு சில பெண்களுடன் தொடர்பில் இருந்துகொண்டு தன்னை அடிக்கடி தாக்கி துன்புறுத்தியதாக, அவரது மனைவி சோபனா வேலூர் போலீஸில் புகார் அளித்தார்.

அதனடிப்படையில், வேலூர் சிபிசிஐடி போலீஸார் டிஎஸ்பி ஜாபர் சித்திக் மீது வழக்குப் பதிந்து விசாரணை நடத்தினர்.

அதில் குற்றச்சாட்டு உண்மை எனத் தெரிய வந்தது. இதையடுத்து, நேற்று இரவு உள்துறைச் செயலர், ஜாபர் சித்திக்கை பணியிடை நீக்கம் செய்து உத்தரவிட்டார்.

## கொல்லங்கோடு நகராட்சி மற்றும் முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கலெக்டர் ஆய்வு



நாகர்கோவில், ஆக.23

கொல்லங்கோடு நகராட்சி மற்றும் முஞ்சிறை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:

கொல்லங்கோடு நகராட்சிக்குட்பட்ட சமத்துவபுரத்தில் 15வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ், ரூ.63 இலட்சம் மதிப்பில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் சமத்துவபுரத்தில் 6வது மாநில நிதிக்குழு மானியத்தின் கீழ், ரூ.48.30 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் தினசரி சந்தை கட்டுமானப் பணிகள் நடைபெறுகிறது. மார்த்தாண்டம்துறையில் 15வது நிதிக்குழு மானியத்தின் கீழ் ரூ.75 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் இறுதி கட்ட பணிகள் நடைபெறுகிறது. இவைகளை உடனடி முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

மேலும் முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மெதுகும்பல் பகுதியில் ரூ.30.80 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் சாலைபணிகள், பைங்குளம் பகுதியில் 15வது நிதிக்குழு மானியத்தின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் சுகாதார மைய பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தபட்டது. இவ்வாறு கலெக்டர் கூறினார். நடைபெற்ற ஆய்வில் கொல்லங்கோடு நகராட்சி ஆணையர் சங்கர், கிள்ளியூர் வட்டாட்சியர் ராஜசேகர், வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜகுமார், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்

## "பதில் சொல்லத் தெரியாமல் திணறல்..." அமைச்சர் நிர்மல் குமார் மீது செந்தில் பாலாஜி சாடல்

சென்னை: "எங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க திராணி இல்லாமல் குதர்க்கமாக பேசி குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர். நான் கேட்ட கேள்விக்கு கடைசி வரை அமைச்சர் பதில் சொல்லவே இல்லை" என்று அமைச்சர் நிர்மல் குமாரை, திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி சாடினார்.

சென்னை ஆலந்தூரில் உள்ள லஞ்ச ஒழிப்புத் துறை அலுவலகத்தில் செந்தில் பாலாஜி இன்று ஆஜரானார். டாஸ்மாக் முறைகேடு வழக்கு தொடர்பாக, அவரிடம் லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் விசாரணை நடத்தினர்.

அதன்பின் செய்தியாளர்களிடம் பேசிய செந்தில் பாலாஜி, "தவெக அரசு அமைந்த பிறகு, ஆட்சி நடத்துவதை விட எதிர்க் கட்சிகள் மீது வழக்குப் பதிவு செய்வதில்தான் சிறப்பு கவனங்களை செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஒரு வழக்கல்ல, 10 வழக்குகள் அல்ல, எத்தனை வழக்குகள் போட்டாலும் அதை சந்திப்பதற்கும் , சட்டப்படி எதிர்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

ஒரு சட்டமன்றத்தின் நிகழ்வு என்பது ஆரோக்கியமான விவாதம் நடக்க வேண்டும். நாட்டின் நிலைகளை குறித்து சட்டமன்றம் நடைபெறுகின்ற பொழுது உறுப்பினர்கள் கேள்வி எழுப்புவதும், அதற்கு சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த அமைச்சர்கள் பதில் சொல்வதும், முதல்வர் பதில் சொல்வதும் இது வரை இருந்த ஒரு நடைமுறை.

ஆனால், இன்றைய தவெக அமைச்சர்கள், எதிர்கட்சிகள் கேட்கக் கூடிய கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல், பதில் தெரியாமல் வேறு விதமாக அவர்கள் அந்த பதில்களை சொல்லி, அந்த இடத்தில் ஒரு கூச்சல் குழப்பத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கின்றார்கள்.

நான் நேற்று என்ன கேட்டேன். மின்சாரத் துறை அமைச்சரிடம் '18 ஹார்ட் டிஸ்க் காணாம போயிடுச்சு, கண்டுபிடிச்சது 38 ஹார்ட் டிஸ்க்ன்னு சொன்னீங்க, மீதி இருக்கற 20 ஹார்ட் டிஸ்க் எங்க இருந்து கண்டுபிடிச்சது, உரிய விளக்கம் என்ன?' என கேள்வி கேட்டால், அது குறித்து கடைசி வரைக்கும் அவர் பதிலே சொல்லவில்லை.

திரும்பவும் ஒரு கேள்வி கேட்டேன். 'நீங்க வெள்ளை அறிக்கையில திமுக ஆட்சியில எங்களுடைய முதல்வராக இருந்தவர் முன்னெடுத்த திட்டங்களை வெள்ளை அறிக்கையிலே சுட்டி காட்டி இருக்கறீங்க. 99,000 மின்மாற்றிகள் மாற்றப்பட்டிருக்கின்றன. புதிதாக திமுக ஆட்சியில் அமைக்கப்பட்டி

தினதமிழ்

23.08.2026




உலகின் மிகவும் விருப்பமான நகை நிறுவனமான ஜோயாலுக்காஸ், தஞ்சாவூர் சவுத் ராம்பார்ட் (South Rampart) பகுதியில் தனது புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட விற்பனையகத்தை ஒரு பிரம்மாண்டமான விழாவின் மூலம் திறந்து வைத்து, அப்பகுதிக்கே ஒரு புதிய பொலிவைச் சேர்த்தது. தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் (பொறுப்பு) டாக்டர் அஞ்சுகம் பூபதி (MD, OG) அவர்கள், ஜோயாலுக்காஸின் தலைமைச் செயல்பாட்டு அதிகாரி (COO) ஹென்றி ஜார்ஜ், கிருஷ்ணசாமி துளசியா வாண்டையார் மற்றும் பிற முக்கியப் பிரமுகர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் முன்னிலையில் இந்த விற்பனையகத்தைத் திறந்து வைத்தார்.

# அழகப்பா பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையிலான பெண்கள் இறகுப்பந்து போட்டி

## அழகப்பா அரசு கலைக் கல்லூரி அணி முதலிடம்




சிவகங்கை, ஆகஸ்ட் _23

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக அனைத்து கலலூரிகளுக்கு இடையிலான பெண்கள் இறகுப்பந்து ( Badminton) போட்டியானது திருப்புத்தூரில் உள்ள ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரி உள்விளையாட்டு அரங்கில் நடத்தப்பட்டதில் காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரி பெண்கள் இறகுப்பந்து அணியினர் முதலிடம் பெற்று கோப்பையை வென்றுள்ளனர். வெற்றி பெற்ற இறகுப் பந்து அணி வீராங்கனைகளை கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி, உடற்கல்வி இயக்குநர் முனைவர். அசோக்குமார் , பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டி வாழ்த்தினார்கள்.

# குமாரசாமிபேட்டை ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் திருவிளக்கு பூஜை



தருமபுரி ஆகஸ்ட் 23

தருமபுரி குமாரசாமிப்பேட்டை ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் 20 ம் ஆண்டு வரலட்சுமி பூஜை மற்றும் திருவிளக்கு பூஜை நடைபெற்றது. வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு மூலவர் ஆதிலட்சுமி அம்மன், உற்சவர் ராஜயோக ராஜலக்ஷ்மி அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். கோயில் வளாகத்தில் கணபதி பூஜை, ஹோமம், வரலட்சுமி ஹோமம் நடைபெற்றது. அது தொடர்ந்து வரலட்சுமி பூஜையும், 108 பெண்கள் கலந்துகொண்ட திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதில் நகரப் பகுதியில் இருந்து திரளான பக்தர்கள், பொதுமக்கள் பங்கேற்று அம்மனை வழிபட்டனர். திருக்கோயில் சார்பில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. திருவிளக்கு பூஜையில் கலந்து கொண்ட அனைவருக்கும் குங்குமம், மாங்கல்ய கயிறு ,மஞ்சள், ஜாக்கெட் துணி, வளையல் ஆகியவைகளை விழா குழுவின் சார்பில் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.





கோவை பேரூர் வியாபாரிகள் சங்கம் சார்பில் பேரூர் தனியார் திருமண அரங்கில் 13 ஆம் ஆண்டு பொதுக்குழு கூட்டம்,சங்க அலுவலக கல்வெட்டு திறப்பு விழா மற்றும் குடும்ப விழா ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது.இதில் 500 கும் மேற்பட்ட சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.மேலும் கல்வி உபகரணங்கள்,நலத்திட உதவிகள் வழங்கப்பட்டது.



மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டாக்டர் டிகே.பிரபு அவர்கள், சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட மகளிர் காவல் நிலையம் அருகில். சமூக நீதித்துறையின் சார்பில், சமூக நீதி கல்லூரி விடுதியில் முடிவுற்ற திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ப.ஆகாஷ், இ.ஆ.ப., அவர்கள்,

தலைமையில் திறந்து வைத்தார். உடன் செயற்பொறியாளர் திரு.மூர்த்தி அவர்கள் உட்பட பலர் உள்ளனர்

# ஓடைக்குள் பாய்ந்த பைக் தூக்கி வீசப்பட்ட வியாபாரி காயம்



இரணியல், ஆக.23

மேக்காமண்டபம்அருகே உள்ள கடமலைகுன்று என்ற இடத்தை சேர்ந்தவர் நேசமணி (55). இவர் திங்கள்நகர் தலகுளம் சாலையில் ஹார்டுவேர் மற்றும் மூங்கில் கம்பு கடை நடத்தி வருகிறார். இவர் நேற்று பைக்கில் திங்கள்நகர் அடுத்த ஆரோக்கியபுரம் சானல் கரை சாலையில் சென்று கொண்டு இருந்தார். ஆரோக்கியபுரம் பகுதியில் சென்றபோது கட்டுப்பாட்டை இழந்த பைக் எதிர்பாராத விதமாக நிலை தடுமாறி அருகே உள்ள ஓடையில் பாய்ந்தது.

இதில் பைக் முன் வீல் முழுவதும் ஓடைக்குள் புகுந்தது. இந்த விபத்தில் நேசமணிக்கு தலை, கை, கால்களில் காயம் ஏற்பட்டது. நேசமணி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவம் குறித்து இரணியல் போலீஸ் சப். இன்ஸ்பெக்டர் முத்து கிருஷ்ணன் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.




# ரேஷன் கடைகளை "சர்வர் பிரச்சினை" மின்னணு சாதனங்களை ஒப்படைக்கும் போராட்டம்

தஞ்சாவூர் ஆகஸ்ட் 23

தஞ்சாவூரில் "சர்வர் பிரச்சினை" காரணமாக இயங்காத மின்னணு சாதனங்களை வட்ட வழங்கல் அலுவலரிடம் நியாய விலை கடை பணியாளர்கள் ஒப்படைத்து வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்

தஞ்சாவூர் வட்டத்தில் உள்ள நியாய விலை கடைகளில் பி.ஓ .எஸ் என்கிற மின்னணு சாதனம் சர்வர் பிரச்சனை காரண மாக ஏறத்தாழ 15 நாட்களாக இயங்கவில்லை. இதனால் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசி ய பொருள்கள் வழங்க இயல வில்லை .இதனால் குடும்ப அட்டை தாரர்களுக்கும், நியாய விலை கடை பணியாளர்களுக்கும், இடையே வாக்குவாதமும்,தகராறு ஏற்பட்டது .இது தொடர்பாக உயர் அலுவலர்களிடம் நியாய விலை கடை பணியாளர்கள் முறையீட்டும் நடவடிக்கை இல்லை

இதனால் அதிருப்தி அடைந்த தஞ்சாவூர் வட்டத்தைச் சார்ந்த தமிழ்நாடு அரசு நியாய விலைக் கடை பணியாளர் சங்கத்தின் வட்டத் தலைவர் பிரகாஷ் தலைமை யில் வட்ட செயலர் லோகநாதன், பொருளாளர் ரவி ,மாவட்ட இணை செயலாளர் சிவகுருநாதன் முன்னிலையில் ,ஏறத்தாழ 80 பணியாளர்கள் வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு மின்னணு சாதனத்துடன் வந்தனர். பின்னர் வட்ட வழங்கல் அலுவலர் ஹெலனி டம் மின்னணு சாதனங்களை ஒப்படைத்து சென்றனர். இதன் காரணமாக பெரும்பாலான நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வில்லை.



# அதிமுக இலக்கிய அணி தலைவராக கோ.விசயராகவன் நியமனம்

சென்னை: அதிமுக இலக்கிய அணி தலைவராக தமிழக அரசின் முன்னாள்தமிழ் வளர்ச்சிதுறை இயக்குநர் கோ.விசயராகவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிமுக இலக்கிய அணி செயலாளராக இருந்த முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன், கடந்த மாதம் அதிமுகவில் இருந்து விலகி, தவெகவில் இணைந்துள்ளார். இதனைத் தொடர்ந்து அதிமுகவில் இலக்கிய அணி மாநில செயலாளர் பதவி காலியாக இருந்து வருகிறது.

இந்நிலையில், தமிழக அரசின் முன்னாள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கோ.விசயராகவனை, இலக்கிய அணி மாநில தலைவராக நியமித்து கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி உத்தரவிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து சென்னையில் பழனிசாமியை சந்தித்து விசயராகவன் வாழ்த்து பெற்றார். எம்ஜிஆர் காலத்துக்கு பிறகு, இப்போது தான் இலக்கிய அணிக்கு தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், குப்பம் கண்டிகை பகுதியை சேர்ந்தவர் விசயராகவன். தமிழக அரசின் உலகத் தமிழாராய்ச்சி கழக இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் உள்ளிட்ட பதவிகளை வகித்துள்ளார்.

இவர் உலகத் தமிழாராய்ச்சி கழக இயக்குநராக இருந்தபோது, அரிய நூல்களை நவீன தொழில்நுட்பத்தில் மின்னாக்கம் செய்தது, தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநராக இருந்த போது, அரசு அலுவலகங்களில் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான சரியான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த அரசால் உருவாக்கப்பட்ட ஆட்சிச் சொல்லகராதி மூலமாக பல்வேறு ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழ் சொற்களை உருவாக்கும் பணியில் முக்கிய பங்காற்றியுள்ளார்.

# ஈரோடு ஆட்சியர் தலைமையில் குழந்தை பாதுகாப்பு குழுக் கூட்டம்



ஈரோடு ஆக 23

ஈரோடு மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் சார்பில் கிராம அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படுவதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. கிராம அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழுக் கூட்ட உறுப்பினர்களுக்கு, கிராம அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படுவதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி 225 கிராமங்களிலும், காணொலிக் காட்சி வழியாக ஒருங்கிணைந்து மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் மூலம் நடத்தப்பட்டது. இதில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையேற்று அனைத்து உறுப்பினர்களுக்கும் பயிற்சி வழங்கினார். இக்குழுக் கூட்டம் நடத்தப்படுவதினால் கிராமங்களில் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு உறுதி செய்யப்படுவது குறித்தும். குழந்தைக ளுக்கான அரசின் திட்டங்கள் கிராமங்களில் உள்ள பொதுமக்களுக்கு எடுத்துரைப்பது குறித்தும், அனைத்து கிராமங்களிலும் இக்கூட்டம் நடத்தப்படுவதன் மூலம் குழந்தை நேய கிராமங்களை உருவாக்கிடவும், ஈரோடு மாவட்டத்தை குழ ந்தைகளுக்கான பாதுகாப்பான மாவட்டமாக உருவாக்கப்படுவதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார். குழந்தைகளுக்கு ஏதேனும் பிரச்சனைகள் இருந்தால் குழந்தை உதவி மையம் 1098 என்ற எண்ணை உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்தார். இப்பயிற்சியானது, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சண்முகப்பிரியா, இளஞ்சிறார் நீதிக் குழுமம் உறுப்பினர் சந்திரசேகர், ஆகியோர் மூலம் பயிற்சி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்புடைய அனைத்து துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.




CONSORT அமைப்பும் மடீட்சியாவும் இணைந்து நடத்திய NATIONAL SENIOR CITIZENS DAY CELEBRATION 2026 மடீட்சியா ஹாலில் நடைபெற்றது.மடீட்சியா தலைவர் V.செந்திகுமார் விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மேலும் சிறப்புவிருந்தினராக புதுச்சேரி மற்றும் தெலுங்கானா முன்னாள் ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தராஜன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

# விளாத்திகுளம் அருகே தனது மகனின் நினைவு நாளை முன்னிட்டு மாபெரும் இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயம் நடத்திய தந்தை



விளாத்திகுளம் ஆகஸ்ட் 23.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள விருசம்பட்டி கிராமத்தை சேர்ந்த இசக்கி முத்து என்பவரின் மகன் ரமேஷின் 15வது நினைவு தினத்தை முன்னிட்டு மாபெரும் முதலாம் ஆண்டு இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை தனது மகன் மீது கொண்ட பாசத்தினாலும், மாட்டுவண்டி பந்தயத்தின் மீது கொண்ட ஈர்ப்பின் காரணமாகவும் இசக்கிமுத்து நடத்தினார். பூஞ்சிட்டு, தேன்சிட்டு என இரு பிரிவுகளாக நடைபெற்ற மாபெரும் இரட்டை மாட்டுவண்டி எல்கை பந்தயத்தில் திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, விருதுநகர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 56 ஜோடி மாடுகள் போட்டியில் கலந்து கொண்டு இலக்கை நோக்கி சீறிப் பாய்ந்தன. பூஞ்சிட்டு பந்தயத்திற்கு போகவர 5 மைல் தூரமும், தேன்சிட்டு பந்தயத்திற்கு போகவர 4 மைல் தூரமும் போட்டியானது நிர்ணயிக்கப்பட்டு நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர் மற்றும் ஓட்டி வந்த சாரதிகளுக்கு விழா கமிட்டி சார்பாக பரிசுத் தொகை வழங்கி கௌரவிக்கப்பட்டது. நடைபெற்ற இந்தமாபெரும் இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு உள்ளிட்டோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

# மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாவட்ட தொழில் மைய அலுவலர்களுடன் திடீர் கூட்டாய்வு



திருப்பூர், ஆகஸ்ட் 23.

மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், தெக்கலூர் பகுதியில் உள்ள எஸ்.சி.எம் தனியார் தொழிற்சாலையில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாவட்ட தொழில் மையம் ஆகிய துறை சார்ந்த அலுவலர்களுடன் திடீர் கூட்டாய்வு மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடு அரசு தொழிற்சாலையில் பணிபுரிந்து வரும் பணியார்களின் பாதுகாப்பையும், ஆரோக்கியத்தினையும் உறுதி செய்யும் வகையில் தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவிநாசி எஸ்.சி.எம். தனியார் தொழிற்சாலையில் தொழிலகப்பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மாவட்ட தொழில்மையம் ஆகிய துறை சார்ந்த அலுவலர்களுடன் கூட்டாய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, தொழிற்சாலையில் பணிபுரிந்து வரும் பணியார்களின்விபரங்கள்குறித்தும், தொழிற்சாலையின் பல்வேறு நிலை பதிவேடுகள் குறித்தும், தொழிலாளர்களுக்கான மருத்துவ வசதிகள் குறித்தும், அடிப்படை வசதிகளான உணவு, குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் குறித்தும், மருந்து பதிவேடுகள் மற்றும் மருந்துகள் இருப்பு குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின் போது, இணை இயக்குநர் (தொழிலகப்பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்) வேலுமணி, பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) கார்த்திகைவாசன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்) பாரதி மற்றும்துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



கோவையில் நடந்த "குட்டி டைரக்டர்" சீசன் 2 குறும்பட போட்டிகள்,தமிழ்நாடு,கேரளா,கர்நாடகா பகுதியிலிருந்து கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான இளம் இயக்குனர்கள்.சிறந்த படைப்புகளுக்கு ரொக்க பரிசும்,சான்றிதழும் வழங்கி கார்ஸ் 327 நிறுவனத்தினர்.சிறப்பு விருந்தினராக திரைப்பட இயக்குனர் ரமேஷ் முருகன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற இளம் குறும்பட தயாரிப்பாளர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

# "இந்திய அளவில் முதல்வர் விஜய்யின் அரசியல் தாக்கம் அதிகரிப்பு" அமைச்சர் ஷாஜகான்

திருநெல்வேலி: "இந்திய அளவில் தமிழக முதல்வர் விஜய்யின் அரசியல் தாக்கம் அதிகரித்துள்ளது" என்று மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஷாஜகான் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் மாநிலம் முழுவதும் ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. சிறுபான்மையின மக்களுக்கு அனைத்து நலத்திட்டங்களும் முழுமையாக சென்றடையும் வகையில் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சட்டப்பேரவையில் சிறுபான்மையினர் நலத்துறையின் மானிய கோரிக்கையில் இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ சிறுபான்மையினர் மகிழ்ச்சி அடையும் வகையில் பல்வேறு சிறப்பான அறிவிப்புகள் இடம்பெறும். சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்கள் முறையாக சென்றடையாத குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் புதிய அறிவிப்புகள் வெளியாகும். குலவணிகர்புரம், வெள்ளக்கோவில் பகுதிகளில் கல்லறை தோட்டங்களில்சுற்றுச்சுவர் அமைக்க ரூ.1.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுக்குழு கூட்ட முடிவின்படி, தமிழக வெற்றிக் கழகத்துடன் தொடர்ந்து பயணிக்கிறோம். இது குறித்து கட்சியின் தேசிய தலைவர் மூலமும் அறிவிப்பு வெளியிடப்பட்டுவிட்டது. தமிழக வெற்றிக் கழகத்துடன் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்தொடர்ந்துபயணிக்கும் முடிவை இஸ்லாமிய சமூக மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனார்.

சட்டப் பேரவை தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் 108 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற நிலையில், மறைமுகமாக பாஜக ஆட்சி அமைந்துவிடக் கூடாது என்பதால் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைக்க இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆதரவு தெரிவித்தது, அமைச்சரவையிலும் இடம்பெற்றது. தற்போது முழு மனதுடன் தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி பயணத்தை தொடர்ந்து வருகின்றோம்.

வக்புசட்டத்திருத்தத்தில் இஸ்லாமியர் அல்லாதவர்களை உறுப்பினர்களாக சேர்க்கும் நடைமுறை தொடர்பாக தமிழக அரசு, நீதிமன்றத்தை நாடியுள்ளது. நீதிமன்றத்தின் முடிவின் அடிப்படையில் அரசு அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்.

ஹஜ் பயணத்துக்கு மானியம் வழங்கப்படுவது போன்று உம்ரா பயணத்துக்கும் மானியம் வழங்க வேண்டும்என்றகோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இது தொடர்பாக முதல்வருடன் கலந்தாலோசித்து அறிவிப்பு வெளியிடப்படும்.

மதம் மாறிய இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு சிறுபான்மையினர் பட்டியலில் இடம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பான விவகாரம் நீதிமன்றத்தில்நிலுவையில் இருப்பதால், சட்டரீதியான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு விரைவில் நல்ல முடிவு எடுக்கும்.

மதச்சார்பற்ற சமூக நீதியை காக்கும் அரசாக தமிழக வெற்றிக் கழக அரசு செயல்பட்டு வருகிறது. திமுக ஆட்சியில் வழங்கப்பட்டதைவிட இஸ்லாமிய, கிறிஸ்தவ சிறுபான்மையின மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக வெற்றிக் கழகம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன் இணக்கமாக சென்றுவிட்டதாக கூறுவது சரியானது அல்ல. சமூக வலைதளங்களில் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இதுபோன்ற பதிவுகள் வெளியிடப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக சிறையில் உள்ள சிறைவாசிகளை விடுவிக்கும் விவகாரத்தில் சட்டத்துக்கு உட்பட்டு செய்ய வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

# நாகர்கோவில் அருகே பிளஸ் 1 மாணவர் தூக்கு போட்டு தற்கொலை

## பள்ளி முன் மாணவர்கள் மறியல்; உறவினர்கள் உடலை வாங்க மறுப்பு



நாகர்கோவில், ஆக. 23

குமரி மாவட்டம் பூதப்பாண்டி அடுத்த ரத்தினபுரம் பகுதியில் குடும்பத்துடன் வசித்து வருபவர் விக்டர் தாமஸ். இவர்கூலித்தொழிலாளி. இவரது மகன் கவின் ஜனில் (16) என்பவர் நாகர்கோவிலில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி ஒன்றில் பிளஸ்1 படித்து வந்தார். கடந்த 20ம் தேதி தன்னுடன் படித்த சக மாணவியரிடம் பள்ளிக்கு வெளியே வைத்து மாணவர் பேசியுள்ளார். இது குறித்து அறிந்ததும் எஸ் எல் பி பள்ளி ஆசிரியர் ஒருவர் மாணவனை கண்டித்துள்ளார். மேலும் கவின் ஜனில் தாயாரை அழைத்து உங்கள் மகன் நடத்தை சரி இல்லை. டிசியை கொடுத்துவிடுவோம் என மிரட்டியதாக தெரிகிறது.

இதனால்கவின்ஜெனில் கடந்த இரு நாட்களாக மனம் உடைந்த நிலையில் இருந்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் 21ஆம் தேதி பள்ளிக்கு செல்லவில்லை. வீட்டில் அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார். உயிருக்கு போராடிக் கொண்டிருந்தவரை உடனடியாக மீட்டு பூதப்பாண்டி அரசு மருத்துவமனை கொண்டு சென்றனர். அங்கு மாணவரை பரிசோதித்த டாக்டர்கள் கவின் ஜெனில் இறந்து விட்டதாக கூறியுள்ளனர்.

இதை அடுத்து மாணவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கிடையே மாணவரின் தற்கொலைக்கு ஆசிரியர்கள் சிலர் தான் காரணம் என என்ற குற்றச்சாட்டை முன்வைத்தும், மாணவியிடம் பழகியதை தவறாக சித்தரித்ததால் தான் மாணவர் தற்கொலை செய்ததாக புகார் எழுந்தது. J எனவே சம்மந்தப்பட்ட ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி முதலில் மாவட்ட எஸ்பி அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டது. பின்னர் தாயாரின் புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மீண்டும் நேற்று மாணவர் தற்கொலை காரணமான ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு மாணவர்கள் சிலர் பள்ளி முன்பு மறியல் போராட்டம் நடத்தினர். சம்பவம் அறிந்ததும் போலீஸ் எஸ்பி மற்றும் டிஎஸ்பி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து மாணவரிடம் பேச்சுவார்த்தை நடத்தி கலைந்து செல்லுமாறு கூறினார்.

இந்த சம்பவம் அறிந்ததும் மாவட்ட கலெக்டர் பிரதாப் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடம் விசாரணைக்கு உத்தரவிட்டார். இதை தொடர்ந்து முதன்மை கல்வி அதிகாரி பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ் பள்ளிக்கு சென்று விசாரணை நடத்தினார்.

தற்கொலை செய்த மாணவர் கவினின் உடல் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது. உடலை வாங்க மாட்டோம் என்று உறவினர்கள் கூறியுள்ளதால் அங்கும் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

# தமிழக வெற்றிக் கழக ஆட்சியின் 100 நாள் சாதனை கூட்டம்

## அமைச்சர் பிரபு தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை ஆக,22,

புதிதாக பொறுப்பேற்றுள்ள தமிழக அரசு 100 நாட்களை கடந்துள்ளது, இந்த அரசின் சாதனைகளை விளக்கும் விதமாக காரைக்குடியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அமைச்சர் பிரபு தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழக அரசின் செயல்பாடுகள், மக்கள் நலத்திட்டங்கள் எடுத்துரைக்கப்பட்டது, மேலும் கல்வி, வேலை வாய்ப்பு, அடிப்படை வளர்ச்சிகள் குறித்து கட்சி நிர்வாகிகள் பேசினர், மேலும் அரசின் மக்கள் நலத் திட்டங்களை மக்களிடத்தில் எவ்வாறு கொண்டு சேர்ப்பது என கலந்தாலோசிக்கப்பட்டது,இதில் சிவகங்கை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கிளை நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு கல்வி நிதி வழங்கல்



திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சரகத்திற்குட்பட்ட பொன்னேரிகூட்டுறவுதொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி சார்பில் 20182019 ஆம் ஆண்டிற்கான மற்றும் சைதாப்பேட்டை கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி சார்பில் 20232024 ஆம் ஆண்டிற்கான, திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு செலுத்த வேண்டிய சட்டப்பூர்வ நிதிகளான கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு கல்வி நிதி ஆகியவற்றின் மொத்த தொகை ரூ.4,84,507/ க்கான காசோலையை, பொன்னேரி மற்றும் சைதாப்பேட்டை கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் சங்க செயலர் யுவராஜ் அவர்கள், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பா.ஜெயஸ்ரீ அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வில், திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் மேலாளர் உடனிருந்தார்.

# 'அரசு நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்க தலைமைப் பண்பு இல்லாததே காரணம்' முன்னாள் அமைச்சர் பி டி ஆர் பழனிவேல் ராஜன் கூறினார்

தஞ்சாவூர் ஆகஸ்ட் 23

அரசு பொதுத்துறை நிறுவனங்கள் சரியான தலைமை பண்பு இன்மை யால் நஷ்டத்தில் இயங்குகின்றன என்றார் முன்னாள் அமைச்சர் பி டி ஆர் பழனிவேல் ராஜன்

தஞ்சாவூரில் தஞ்சாவூர் தொழில், வர்த்தக சங்கம் சார்பில் நடை பெற்ற சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி யில் வணிகத்தில் நெருக்கடியான சூழலில் தலைமைப் பண்பு என்ற தலைப்பில் அவர் பேசினார்

சி.ஐ .ஜி தணிக்கை அறிக்கை யில் தமிழ்நாடு அரசின் நிறுவனங் களான மூலதன செலவு 8 சதவீதம் என்றும் சராசரி மூலதனத்தின் மீதான வருவாய்0.8சதவீதம்மட்டுமே எனவும் கூறப்பட்டுள்ளது. அரசு நிறுவனங்கள் நஷ்டத்தில் தான் இயங்க வேண்டும் என ஏதேனும் சட்டம் உள்ளதா? இயலாமை, தவறான நோக்கங்கள், செயல்கள், போதிய தலைமை பண்பு இன்மையால் வரி செலுத்து வோரின் பணம் வீணடிக்கப்படு கிறது. இதனால், புதிய ,புதிய நிறுவனங்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட அறிக்கையில் சில உதாரணங்கள் கூறியிருந்தேன். அரசு போக்குவரத்து கழகங்களில் ஒரு ரூபாய் வருமானம் வந்தால், ஒரு ரூபாய்க்கும் அதிகமாக ஊதி யத்திற்கும், ஓய்வூதியத்துக்கு மட்டுமே செலவாகிறது. பேருந்து கள் அல்லது டீசல் செலவை பற்றி பேசவில்லை. மக்களுக்கு குறைந் து செலவில் வசதியான சுற்றுச் சூழலுக்கு உகந்த போக்குவரத்தை வழங்குவதே நோக்கமாக இருக்கி றது ,என்றாலும், நம்முடைய நிறுவனத்தை நாம் உண்மையான நோக்கத்துடன் சரியான திசையில் கொண்டு செல்ல வேண்டும்

இரண்டு ஆண்டுகளில் 7 ஆயிரத் திற்கும் அதிகமான கோப்புகளை பார்த்தது என்னுடைய மிகப்பெரிய சாதனை .எந்தத் துறை அமைச்சர் ஆக இருந்தாலும்,5 ஆண்டுகளில் உள்ளவர்கள் கூட 20 கோப்புகளைகூடதிரும்பிஅனுப்பி இருக்க மாட்டார்கள். மாற்றம் தேவையில் லை என்பதுதான், அதற்கு அர்த்தம். யாரோ கோப்புக் கொடுக்கிறார். அதற்கு ஏற்கனேவே 10 பேர் கையொப்பம்



போட்டனர். அதில் நாமும் கையொப்பம் போட்டால் வேலை முடிந்தது

ஆனால் 2 ஆண்டுகளில் ஏறத் தாழ 7 ஆயிரம் கோப்புகளில் 1,300 கோப்புகளை திருப்பி அனுப்பினேன் .அவற்றை திருப்பி அனுப் பியது மிகப்பெரிய புரட்சி. அதனா ல்தான், வருவாய் பற்றாக்குறை ரூபாய் 62 ஆயிரம் கோடியில் இருந்து ரூபாய் 30 கோடியாக குறைந்தது. வரலாற்றில் செய்ய முடியாத மாற்றத்தை செய்தோம் என்றார்பழனிவேல் ராஜன்

நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் ஆசிப் அலி தலைமை வகித்தார் செயலர் ராமநாதன் ,பொருளாளர் முத்தையா, துணைத்தலைவர் பிரபு இணைசெயலர்சுந்தர நாராயணன் உள்ளிட்டோர் கலந்து கொண்ட னர்.

# ஈரோடு மாநகர் மாவட்டத்தில் 1008 இடங்களில் விநாயகர் சிலைகள் வைத்து வழிபட ஏற்பாடு

ஈரோடு ஆக 23

ஈரோடு மாநகர் மாவட்ட இந்து முன்னணி சார்பாக நடக்கவிருக்கும் விநாயகர் சதுர்த்தி திருவிழா ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது, இதில் ஈரோடு மாநகர் மாவட்டம் சார்பாக 1008 இடங்களில் விநாயகர் திருவுருவ சிலை பிரதிஷ்டை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது, ஈரோடு நகரில் செப்டம்பர்14ஆம் தேதி சிலைகள் நிறுவப்பட்டு 17ஆம் தேதி விசர்ஜன ஊர்வலம் நடத்தவும் மற்றும் மாவட்டம் சார்பாக பல்வேறு பகுதிகளில் 20 ஆம் தேதி வரை ஸ்ரீ விநாயகர் விசர்ஜன ஊர்வலம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.



ஈரோடு மாநகர் மாவட்ட தலைவர் ப. ஜெகதீசன் தலைமையில் , மாநில பொதுச் செயலாளர் கிஷோர் குமார் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச்செயலாளர் க.கார்த்தி மாவட்டச் செயலாளர்கள் சங்கர் , கார்த்திகேயன் , முரளி , ரமேஷ் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முருகன் , மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனிவேல் உள்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# விளாத்திகுளம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் வரலட்சுமி நோன்பு



விளாத்திகுளம் ஆகஸ்ட் 23.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் அமைந்துள்ள 400 ஆண்டுகள்பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் ஆவணி மாத வரலட்சுமி நோன்பையொட்டி மீனாட்சி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. விளாத்திகுளம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த சுமார் 1000 சுமங்கலி பெண்கள் வாழை இலை போட்டு அதில் மஞ்சள், குங்குமம், பச்சரிசி. எலுமிச்சை பழம், வளையல் வைத்து பச்சரிசியின், மேல் அலங்கரிக்கப்பட்ட கலசம் வைத்து மீனாட்சி அம்மனுக்கு விளக்கேற்றி,சட்டை துணி தேங்காய்,வாழைப்பழம்,வெற்றிலைபாக்கு மற்றும் படையல்பொருட்களைவைத்து சிறப்பு பூஜை செய்தனர், தொடர்ந்து கலசத்திற்கு குங்கும அர்ச்சனை செய்யப்பட்டு சுலோகம் சொல்லி மாங்கல்யம் அணிவிக்கப்பட்டதை தொடர்ந்து பக்தர்களுக்கு நோன்பு கயிறு கட்டி சிறப்பு பூஜை நடைபெற்றது, தொடர்ந்து மீனாட்சி அம்மனுக்கு மகாதீபாராதனை காண்பிக்கப்பட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

வரலட்சுமி நோன்பு சுமங்கலி பூஜைக்கு வந்த பெண்களுக்கு கோவில் உழவாரப்பணி குழு சார்பில் வாழையிலை, வளையல்,சட்டை துணி உள்ளிட்ட பூஜை பொருட்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

# ஓணம் பண்டிகை ஒட்டி 3,000 வேட்டிகளால் உருவான பிரம்மாண்ட பூக்களம்: 'ராம்ராஜ் காட்டன்' புதிய ஆசிய சாதனை!

திருப்பூர்,ஆக23

ஓணம் பண்டிகையை முன்னிட்டு, பிரபல ஆடை தயாரிப்பு நிறுவனமான 'ராம்ராஜ் காட்டன்' 3,000 வேட்டிகளைப் பயன்படுத்தி ஆசியாவின் மிகப் பெரிய பூக்களத்தை (முண்டுக்களம்) உருவாக்கி 'ஏசியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது. கேரளாவின் பாரம்பரிய ஓணம் பண்டிகையின் அடையாளமான அத்தப் பூக் கோலத்தையும், தமிழர்களின் கலாச்சார அடையாளமான வேட்டியையும் ஒன்றிணைக்கும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

கொச்சியில் உள்ள தனியார் மாலில் 30 அடி விட்டத்தில் இந்த பிரம்மாண்ட முண்டுக்களம் வடிவமைக்கப்பட்டது.



இதற்கான சாதனைச் சான்றிதழ் மற்றும் விருதினை, ஏசியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ் அமைப்பின் நடுவர் சஞ்சய் போலா, ராம்ராஜ்காட்டன்நிறுவனத்தின் தலைவர் நாகராஜன் அவர்களிடம் வழங்கிக் கௌரவித்தார். இது குறித்து ராம்ராஜ் காட்டன் தலைவர் நாகராஜன் தெரிவித்ததாவது:

"எங்களைப் பொறுத்த வரை வேட்டி என்பது வெறும் ஆடை மட்டுமல்ல; நமது கலாச்சாரத்தின் ஓர் அங்கம். இந்த ஓணம் பண்டிகையில் அந்தத் தொடர்பை மக்கள் நினைவில் கொள்ளும் வகையில் 3,000 வேட்டிகளால் இக்களத்தை உருவாக்கினோம். கலாச்சாரத்தை இன்றைய தலைமுறைக்கு புதுமையான வடிவில் கொண்டு சேர்த்ததில் பெருமிதம் கொள்கிறோம்."

பாரம்பரியத்தையும் புதுமையையும் இணைத்து நிகழ்த்தப்பட்டுள்ள இந்தச் சாதனை பொதுமக்கள் மற்றும் பார்வையாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது

# ஈரோடு கோட்டை பெருமாள் கோவிலில் வரலட்சுமி நோன்பையொட்டி 3 ஆயிரம் பெண்களுக்கு சேலைகள்

ஈரோடு ஆக 23

ஈரோடு கோட்டை பெருமாள் கோவிலில் வரலட்சுமி நோன்பை யொட்டி சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. கமல வல்லி தாயார் மூலவர் சிலைக்கு வெள்ளிக் கவசம் அலங்காரம் உற்சவ சிலைக்கு வரலட்சுமி அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் ஆராதனை நடைபெற்றது. இதில் ஏராளமான பெண்கள் நீண்ட வரிசையில் நின்று கமல வல்லி தாயாரை தரிசனம் செய்தனர்.அவர்களுக்கு மஞ்சள் கயிறு போன்றவை வழங்கப்பட்டது. மேலும் சுமார் 3 ஆயிரம் பெண்களுக்கு சேலையும் வழங்கப்பட்டன. அமைச்சர் விஜய் பாலாஜி பரிந்துரையின் பேரில் கோவில் அறங்காவலர் குழு தலைவர் கர்சிப் சுப்பிரமணியம் அறங்காவலர்கள் டாக்டர் சுந்தர் ராஜ் ராவணன் அரிகரன் ராணி மற்றும் அரி பாபு முன்னாள் தலைவர் செல்லம் ஆகியோர் இலவச சேலைகளை பொது மக்களுக்கு வழங்கினர். முன்னதாக வீடுகளிலும் வரலட்சுமி சிலைக்கு அலங்காரம்செய்துவைத்து வழிபட்டனர். அருகில் வசிக்கும் சுமங்கலி பெண்கள் இந்த பூஜையில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பூ மஞ்சள் வளையல் கொடுத்து ஜாக்கெட் துணி களையும் வழங்கினர்.



சேலம் மாவட்டம், நங்கவள்ளி, கைலாஷ் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வான நபர்களுக்கு, பணிநியமன ஆணைகளை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்திரு.ஆ.விஜய்தமிழன்பார்த்திபன்அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் வழங்கினார்கள். உடன் மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) திருமதி பெ.கவிதா, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய துணை இயக்குநர் மரு செ.மணி ஆகியோர் உள்ளனர்.

# வாலிபர் தற்கொலை ஆய்வாளர்கள் மீது குற்றச்சாட்டு



சிவகங்கை ஆக,22, காரைக்குடி உட்கோட்டம், சாக்கோட்டை காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்டது கள்ளமணக்குடி . இந்தப் பகுதியில் பெரிய கருப்பன் மகன் ரவிக்குமார்,,வயது 48, என்பவர் குடும்பத்துடன் வசித்து வந்துள்ளார், இவரது மனைவி முருகேஸ்வரி என்பவர் உடல்நிலை சரியில்லாமல் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு இறந்து விட்டதாக கூறப்படுகிறது, கிருத்திக் ரோஷன்,வயது 12, என்ற மகனுடன் வாழ்ந்து வந்ததாககூறப்படுகிறது, இந்த நிலையில்வீட்டில்தாயார் வள்ளிக்கண்ணு, இவரது தம்பி மனைவி கலைச்செல்வி பாஸ்கரன் ஆகியோர்கள் , குடியிருக்கும் வீட்டில் ரவிக்குமார் என்பவரை தங்க கூடாது என சொல்லியதாகவும் கூறப்படுகிறது, பின்னர் இதுகுறித்து சாக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் மனுவும் கொடுக்கப்பட்டதாகவும், புகார் மனு விசாரணையின் போது காவல் நிலைய ஆய்வாளர் ஒரு தலைப்பட்சமாக செயல்பட்டதாகவும், ரவிக்குமார் என்பவரை வீட்டை விட்டு வெளியேற வேண்டும் எனவும், மீறி இருந்தால் கைது செய்ய நேரிடும் என எச்சரித்ததாகவும், இதனால் மனம் உடைந்த ரவிக்குமார் நேற்று வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து அவரது உறவினர்கள் காவல் நிலையத்தை முற்றுகையிட போவதாக தகவல்கள் கிடைத்த நிலையில் காரைக்குடி ஏ எஸ் பி ஆஷிஷ் புனியா காவல் நிலையத்திற்கு வந்த நிலையில், ரவிக்குமார் உறவினர்கள், ஆய்வாளர் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை சுமத்தி ,கொடுத்த புகார் மனுவினை பெற்றுக்கொண்டார், பின்னர் புகார் மனு தொடர்பாகவிசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்த நிலையில் அவரதுஉறவினர்கள்கலைந்து சென்றனர், இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# ஓடை புறம்போக்கு நில ஆக்கிரமிப்பை அகற்றி, பொது வழிப்பாதை அமைக்க விவசாயிகள் கோரிக்கை



கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை அருகே உள்ள ஒடையாண்டஹள்ளி தரப்பு எச்சம்பட்டி கிராமத்தில் ஊர்மக்க பயன் பெறும் வகையில் பொது வழிப்பாதை கேட்டு எச்சம்பட்டி, எத்தனஅள்ளி ஆகிய கிராம மக்கள் சிங்கேரியம்மா கிணறு பள்ளத்தில் இருந்து போடம்பட்டி ரோடு இணைப்பு வரை அரசு ஓடை புறம்போக்கில் பொதுவழி அமைக்க வேண்டும் என்று எச்சம் பட்டி கிராமத்தை சேர்ந்த மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் பல ஆண்டுகளாக கோரிக்கை மனுவினை கொடுத்து வந்தனர். இதன் அடிப்படையில் இன்று போலீசார் பாது காப்புகளுடன் வருவாய் துறையினர் ஓடைப்புறம்போக்கு நிலத்தினை அளவீடு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியினை மேற்கொண்டனர். அப்போது ஓடை புறம்போக்கு நிலத்தை அளவிடாமல் விவசாயி முனுசாமி என்பவரது பட்டா நிலத்தை மட்டும் வருவாய்துறையினர்அளவீடு செய்ததால் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் முறைப்படி சிங்கேரியம்மா கோவில் பள்ளத்தில் இருந்து ஓடை புறம்போக்கில் இருந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி பொது மக்களுக்கு பொது வழி ஏற்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் வழியுறுத்தியதால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது, பின்னர் இது குறித்து அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறுகையில் சீங்கேரியம்மா கிணறு பள்ளத்தில் இருந்து போடம்பட்டி ரோடு வரை ஓடை புறம்போக்கு நிலம் உள்ளது இந்த ஓடை புறம்போக்கு நிலத்தின் தனி நபர் ஆக்கிரமிப்பை அகற்றி பொது வழிப்பாதை அமைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரை சந்தித்து புகார் மனு கொடுத்தை அடுத்து வருவாய் துறையினர் ஓடை புறம் போக்கு ஆக்கிரமிப்பு பணிகளை மேற்கொண்டனர். ஆனால் வருவாய்துறையினர் திமுகவை சேர்ந்த சரவணன் சிவசங்கரன், முருகேசன் ஆகியோர் ஆக்கிரமிப்பு செய்துள்ள அரசு புறம்போக்கு மீட்காமல் தன்னுடைய பட்டா நிலத்தை அழவீடு செய்து கல் நட்டு உள்ளதோடு கோழிப்பண்ணைக்கு வரும் மின்சாரத்தையும் துண்டித்து விடுவதாக மின்வாரிய அலுவலர்கள் மிரட்டி வருவதாகவும் அகையால் வருவாய் துறைமுறைப்படி ஓடை அரசுப் புறம்போக்கு நிலத்தை முறையாக அளவிடும்பணியினைசெய்து பொது வழிப்பாதை அமைக்க தமிழக அரசு மற்றும் மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டும் என்று வேதனையுடன் தெரிவித்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள்

# குமரியில் விவசாயிகள் தொடர் புகார் நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க அதிகாரிகள் நடவடிக்கை



நாகர்கோவில், ஆக.23 கன்னியாகுமரி மாவட்டத்தில் பறக்கை, இறச்சக்குளம் உட்பட பல பகுதிகளில் கன்னிப்பூ நெல் அறுவடை பணிதொடங்கி நடந்து வருகிறது. குமரி மாவட்டம் முழுவதும் 10 அரசு நெல் கொள்முதல் நிலையங்கள் உள்ள நிலையில், கூடுதலாக நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க குமரி மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் வேளாண் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருந்தார். ஆனால் இதுவரை பயன்பாடாத அரசு கட்டிடங்களில் புதிய நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதைப்போல் நெல் அறுவடை பணி துவங்கியும் ஏற்கனவே செயல்பட்டு வந்த அரசு நெல் கொள்முதல் நிலையங்களையும் திறக்காமல் பூட்டியே கிடந்தது. இதனால் அரசு நிர்ணயித்த விலையில் நெல்லை விற்பனை செய்ய முடியாமல் தவித்த விவசாயிகள் தனியார் மில் உரிமையாளர்களுக்கு நெல்லை விற்பனை செய்து வந்தனர். இதுகுறித்து குமரி வேளாண் பிரதிநிதிகள் குமரி மாவட்ட ஆட்சியர் பிரதாப், மற்றும் வேளாண் துறை அதிகாரிகளிடம் தொடர் புகார் அளித்தனர். இதை தொடர்ந்து உடனடியாக குமரி மாவட்டத்தில் உள்ளஅரசு நெல் கொள்முதல் நிலையங்களை திறக்குமாறு ஆட்சியர் மு.பிரதாப், வேளாண்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.இதைதொடர்ந்து புத்தளம் பகுதியில் இந்த ஆண்டுக்கான நெல் கொள் முதல் நிலையம் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. பறக்கை, தேரூர், பத்மநாபன் புதூர் ஆகிய பகுதிகளில் முதல் கட்டமாக நெல்கொள்முதல் நிலையங்கள் செயல்படதுவங்கியது. திறப்பு விழா நிகழ்ச்சிக்கு நுகர் பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் சிவகுமார் தலைமை தாங்கினார். குமரி நீர் பாசனத்துறை மாவட்ட தலைவர் வின்ஸ் ஆன்றோ நெல் கொள்முதல் நிலையத்தை திறந்து வைத்தார். மீன்வளத்துறை முன்னாள் தலைவர் சகாயம், வேளாண்துறை அதிகாரிகள், மற்றும் விவசாய பிரதிநிதிகள் திரளானோர் கலந்து கொண்டனர். அப்போது அவர்கள் கூறுகையில்; மாவட்ட ஆட்சியர் கூடுதல் முயற்சி எடுத்து மேலும் 5 இடங்களை வருவாய் துறை மூலம் கண்டறிந்து குமரி மாவட்டத்தில் மொத்தமாக 25 நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளது. மிகச் சிறப்பான முறையில் நெல் கொள்முதலுக்குமாவட்ட நிர்வாகம் தயாராகி உள்ள நிலையில் குமரி மாவட்டத்தினுடைய விவசாய பெருங்குடி மக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல்லை விற்பனை செய்து, பயன்பெற வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.


# சேரன்மகாதேவி ஸ்காட் பாலிடெக்னிக் கல்லூரியில் மண்டல அளவிலான உள்விளையாட்டு போட்டி



நெல்லை சேரன்மகாதேவி ஸ்காட் பாலிடெக்னிக் கல்லூரியில் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கிடையேயான மண்டல அளவிலான உள் விளையாட்டு போட்டிகள் சதுரங்கம், கேரம், மேஜை பந்து, இறகு பந்து நடைபெற்றது. இதில்திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி, விருதுநகர் மாவட்டங்களை சார்ந்த பல்வேறு அணிகள் கலந்து கொண்டன ஆண்கள் மற்றும் பெண்கள் சதுரங்கப் பிரிவில் ஸ்காட் பாலிடெக்னிக் கல்லூரி அணிகள் முதலிடம் பெற்றனர். ஆண்கள் பிரிவில் கேரம் மேஜைபந்து பிரிவில் சங்கர் பாலிடெக்னிக் முதலிடமும், இறகு பந்து போட்டியில் நாகர்கோயில் அரசு தொழில் நுட்ப கல்லூரி, அணியினர் முதலிடமும், பெண்கள் பிரிவில் கேரம் போட்டியில் ஸ்காட் பாலிடெக்னிக் கல்லூரி முதலிடமும் மேஜை பந்து பிரிவில் மெரிட் பாலிடெக்னிக் கல்லூரி முதலிடமும் பெற்றனர். வெற்றி பெற்றவர்களை ஸ்காட் நிறுவனர் டாக்டர் கிளிட்டஸ் பாபு, அமலி கிளிட்டஸ் பாபு, வாழ்த்தினர். சிறப்பு விருந்தினராக உதவி காவல் ஆய்வாளர் அந்தோணி கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசினை வழங்கினார். ஸ்காட் கல்வி நிறுவனங்களின் இயக்குநர்கள் டாக்டர் ஜான் கென்னடி, டாக்டர். சாதிக், மற்றும் ஸ்காட் சர்வதேச பள்ளி முதல்வர் கல்பனா வாழ்த்துரை வழங்கினர். பாலிடெக்னிக் முதல்வர் மணிமாறன், நிர்வாக அலுவலர். சித்திரை சங்கர், உடற்கல்வி இயக்குநர்கள் அன்வர் ராஜா, வண்டிமலையான் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களை பாராட்டினர்..


# சினிமா படப்பிடிப்பின்போது கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிய முதல்வர் விஜய்!





பழநி: சினிமா படப்பிடிப்பின்போது வாக்குறுதி அளித்தபடி, கொடைக்கானல் தாண்டிக்குடி அருகேயுள்ள அரசன் கொடை மலைக் கிராமத்துக்கு சாலை அமைக்க முதல்வர் விஜய் ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளதால் கிராம மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கொடைக்கானல் கீழ்மலைகிராமமானதாண்டிக்குடியில் இருந்து 9 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது அரசன் கோடை கிராமம். இக்கிராமத்தில் 250க்கும் மேற்பட்டோர் வசிக்கின்றனர். இங்கிருந்து பிற பகுதிகளுக்கு செல்ல வேண்டுமென்றால் கரடு முரடான மலைப்பாதை, வனப்பகுதி வழியாக நடந்துதான் செல்ல வேண்டியுள்ளது. இந்த கிராமத்துக்கு பேருந்து வசதி இல்லாததால் வாடகை ஜீப் மூலம் தாண்டிக்குடி வரையும், அங்கிருந்து பேருந்து மூலம் வெளி இடங்களுக்குச் சென்று வருகின்றனர். எனவே, தார் சாலை அமைக்க வேண்டும் என இக்கிராம மக்கள்பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வந்தனர். கடந்த திமுக ஆட்சியில் இந்த கிராமத்துக்கு சாலை அமைக்கும் பணி தொடங்கவிருந்த நிலையில் ஒப்பந்ததாரர் உரிமிழந்தார். அதன் பின்பு சாலை பணி கிடப்பில் போடப்பட்டது. இந்நிலையில், படப்பிடிப்பின் போது கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், இந்த மலைக் கிராமத்துக்கு சாலை அமைக்க முதல்வர் விஜய் ரூ.5 கோடி ஒதுக்கியுள்ளார். இது தொடர்பாக கடந்த சில நாட்களுக்கு முன்பு சட்டப்பேரவையில் அமைச்சர் ஆனந்த் பேசியதாவது: கடந்த ஆண்டு மே மாதம் தற்போதைய முதல்வரும், நடிகருமான விஜய், அரசன் கோடை கிராமத்தில் நடைபெற்ற சினிமா படப்பிடிப்பில் கலந்து கொண்டார். அப்போது, அந்த கிராமத்தில் இருந்து ஒரு மணி நேரம் முதல்வர் நடந்து வந்தார். அங்கு சொந்த செலவில் சாலை அமைக்கலாமா என முதல்வர் கேட்டார். பேனர் வைப்பதற்கே அனுமதி இல்லை. எப்படி சாலை அமைக்க அப்போதைய தமிழக அரசு அனுமதி தரும்? என்று கூறினேன். ஆட்சிக்கு வந்ததும் சாலை அமைக்க நடவடிக்கை எடுப்போம் என்று கூறினார். அதன்படி, தவெக ஆட்சிக்கு வந்த 5வது நாளில், அந்த கிராமத்துக்கு சாலை அமைக்க வேண்டும் என முதல்வர் அலுவலகத்தில் இருந்து உத்தரவிடப்பட்டது. ரூ.5 கோடியை ஒதுக்கி சாலைப் பணிகளைத் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பேசினார். இதுகுறித்து அரசன் கொடை கிராமத்தினர் கூறுகையில், இங்கு படப்பிடிப்புக்கு வந்தபோது, தவெக ஆட்சிக்கு வந்தவுடன் சாலை வசதி உட்பட அனைத்து அடிப்படை வசதிகளையும்செய்து கொடுப்பதாக முதல்வர் விஜய் உறுதியளித்தார். அதன்படி, தற்போது சாலை அமைக்க நிதி ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. விரைவில் சாலையை அமைத்து போக்குவரத்து வசதியை ஏற்படுத்த வேண்டும் என்று கூறினர். இதனிடையே, கடந்த ஆண்டு படப்பிடிப்பின் போது அரசன்கொடை கிராமத்திலிருந்து முதல்வர் விஜய் நடந்து சென்றது, மக்களை சந்தித்து பேசியதை வீடியோவாக இணைத்து தவெகவினர் வாட்ஸ் ஆப்பில் ஸ்டேட்டஸ் ஆக வைத்தும், சமூக வலைதளங்களில் பதி விட்டும் டிரெண்டிங் செய்து வருகின்றனர்.

# மதுரையில் Kolors Health Care புதிய கிளை திறப்பு நடிகை அபிராமி சிறப்பு விருந்தினராக பங்கேற்பு




மதுரை ஆகஸ்ட் :23 மதுரை தல்லாகுளம் பகுதியில் *Kolors Health Care* நிறுவனத்தின் புதிய கிளை இன்று, ஆகஸ்ட் 22ஆம் தேதி திறக்கப்பட்டது. இந்த திறப்பு விழாவில் வானவில்விருமாண்டிபோன்ற திரைப்படங்களில் கதாநாயகியாக நடித்த பிரபல நடிகை அபிராமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டுபுதியகிளையை திறந்து வைத்தார்அ தனைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களை சந்தித்த திரைப்பட நடிகை அபிராமி அவர்கள் கூறிய தாவது சினிமா துறையைச் சேர்ந்த நடிகர் விஜய் அவர்கள் தற்போது தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்றுள்ளார் என்ற கேள்விக்கு பதில் அளித்த அபிராமி அவர்கள் சினிமா குடும்பத்திலிருந்து ஒருவர் முதல்வராக பொறுப்பேற்று மிகவும் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது கண்டிப்பாக நல்லது செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்று தெரிவித்தார்வி ருமாண்டி படம் போல திரும்பவும் வந்தால் நடிப்பீர்களா என்ற கேள்விக்கு தான் நடித்த விருமாண்டி படத்திற்கு இன்று வரை ஒரு தனி மதிப்பு இருந்து வருகிறது அதே மாதிரி நல்ல படங்கள் வந்து கொண்டு தான் உள்ளன என்றார் மேலும் அரசியல் சம்பந்தமான கேள்விக்கு இது பொலிடிக்கல் சம்பந்தமில்லாத நிகழ்வு தலைவா என்று தெரிவித்தார் மேலும் இங்கு எடை குறைப்பு, உடல் எடை மேலாண்மை, தலைமுடி பராமரிப்பு மற்றும் சருமப் பராமரிப்புஉள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கும் வகையில் *Kolors Health Care* செயல்பட்டு வருகிறது. நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ தகவலின் படி, முடி உதிர்வு, முடி வளர்ப்பு, முடி மாற்று சிகிச்சை, சருமப் புத்துணர்வு, முகப்பரு மற்றும் தழும்புகள் உள்ளிட்ட பல்வேறு *hair & skin care* சேவைகளும் வழங்கப்படுகின்றன மேலும், எடை குறைப்பு, *inch loss, body toning* மற்றும் *body therapy* உள்ளிட்ட *wellness* சார்ந்த சேவைகளையும் நிறுவனம் வழங்குகிறது. 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன் செயல்பட்டு வரும் *Kolors Health Care*, தென்னிந்தியாவின் பல்வேறு நகரங்களில் கிளைகளை கொண்டுள்ளது இந்நிகழ்வில் *kolors managing director Vijaya Krishna* மற்றும் *Key executive Venkata Sivaji Kuna* உள்பட பலர்கலந்து கொண்டனர்

# தனியார் நிதி நிறுவன ஊழியர் மாயம்! மகனை கண்டுபிடித்து தரக்கோரி தாய் போலீசில் புகார்



தருமபுரி ஆகஸ்ட் 23 தருமபுரி மாவட்டம் பாலக்கோடு அவுசிங் போர்டு பகுதியைச் சேர்ந்தவர் தங்கமணி. கணவரை பிரிந்து, தனது இரண்டு மகன்களுடன் வசித்து வரும் இவர், காய்கறி கடை நடத்தி வருகிறார். இவரது இளைய மகன் சிவாஜிகணேசன், 25. பென்னாகரத்தில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில்பணியாற்றி வருகிறார். இந்நிலையில், கடந்த 2ஆம் தேதி வேலைக்குச் செல்வதாக கூறிவிட்டு வீட்டை விட்டு சென்ற சிவாஜிகணேசன், மீண்டும் வீடு திரும்ப 10 நாட்கள் ஆகும் என தாயிடம் தெரிவித்துள்ளார். கடந்த 10ஆம் தேதி இரவு தாயிடம் செல்போனில் பேசியுள்ளார். அதன்பிறகு, 11ஆம் தேதி முதல் அவரது செல்போன் அணைக்கப்பட்ட நிலையில் இருந்துள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்த தாய், உறவினர்கள் மற்றும் பல்வேறு இடங்களில் மகனை தேடியுள்ளார். ஆனால், அவர் கிடைக்கவில்லை. இதுகுறித்து அவர் பணியாற்றிய நிதி நிறுவனத்தில் விசாரித்தபோது, 11ஆம் தேதி காலையே வீட்டிற்குச் செல்வதாக கூறிவிட்டு சிவாஜிகணேசன் சென்றதாக தெரிவித்துள்ளனர். இதையடுத்து, தனது மகனை கண்டுபிடித்து தரக்கோரி தாய் தங்கமணி பென்னாகரம் காவல் நிலையத்தில்புகார்அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, மாயமான தனியார் நிதி நிறுவன ஊழியர் சிவாஜிகணேசனை தீவிரமாக தேடி வருகின்றனர்.

## தோட்டியோடு பகுதியில் கார்– லாரி மோதல்:

# குளத்தில் குதித்து தப்பிய டிரைவரை மறுகரையில் மடக்கிய போலீசார்



இரணியல், ஆக. 23 நாகர்கோவில் திருவனந்தபுரம் நான்கு வழிச்சாலை பணிகள்துரிதமாகநடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக தோட்டியோடு பகுதியில் மேம்பாலம் அமைக்கும் பணிகள் நடந்து வருவதால் வாகனங்கள் நீண்ட வரிசையில் நிதானமாகவும் சென்று வருகின்றன. போக்குவரத்தை குளச்சல் போக்குவரத்து போலீசார் தினமும் ஒழுங்குபடுத்தி வருகின்றனர். இந்த நிலையில் நேற்று டாரஸ் லாரி ஒன்று இந்த சாலையில் வந்து கொண்டிருந்தது. எதிரே சொகுசு கார் ஒன்றும் வேகமாக வந்தது. அப்போது எதிர்பாராத விதமாகடாரஸ்லாரி, சொகுசு கார் மீது மோதியது. இந்த விபத்தில் காரின் ஒரு பக்கம் முழுவதும் பலத்த சேதம்அடைந்தது. உடனடியாக அந்த வழியாக வந்தவர்கள் காரையும் லாரியையும் மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். தொடர்ந்து லாரி டிரைவரை இறங்க வலியுறுத்தினர். அப்போது பயந்து போன லாரி டிரைவர் தன்னை பிடித்து அடித்து விடுவார்கள் என்ற பயத்தில் லாரியின் ஜன்னல் வழியாக பின்பக்கம் வந்து அருகில் கிடந்த குளத்தில் குதித்து நீந்தி மறுகரைக்கு சென்று விட்டார். இதனிடையே தகவல் அறிந்து வந்த குளச்சல் போக்குவரத்து போலீசார் அவரை பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர் மார்த்தாண்டம் அருகே நட்டாலம் பகுதியை சேர்ந்த ஸ்ரீகுமார் (46) என தெரிய வந்தது. மோதிய வாகனங்கள் சாலையில் நின்றதால் அந்த பகுதியில் கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. போலீசார் லாரி மற்றும் சொகுசு காரை அப்புறப்படுத்தி போக்குவரத்தை ஒழுங்கு படுத்தினர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பாக டெங்கு மற்றும் பருவமழைகால நோய்களுக்கான முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் நடைபெற்றது. உடன் மாவட்ட சுகாதார அலுவலர்.அஜிதா, உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்).தமிழ்செல்வன்,.வடிவேல் மற்றும்நகராட்சி, பேரூராட்சிகள், மருந்துவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.